நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஆசிரியர்: ஆறு    Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 30 சனிக்கிழமை (16 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 822

# வடக்கில் முக்கிய நகரம் மீது தாக்குதலுக்கு படை முஸ்தீபு!

## விசேட இராணுவ அணிகளை அமைக்க அரசு அனுமதி

கொழும்பு, ஒக்டோபர் 16

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியின் முக்கிய நகரம் ஒன்றின் மீது பாரிய தாக்குதலைத் தொடுக்க ஸ்ரீலங்கா இராணுவம் தயாராகி வருகிறது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்காக இராணுவத்தில் மேலும் சில விசேட அணிகளை அமைப்பதற்கும் அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

மேற்படி தாக்குதல் திட்டத்தைத் தயாரிப்பதில் இராணுவத்தின் உயர்மட்ட அதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

டெனிம் உடையில் குண்டுகளுடன்

## தற்கொலைத் தாக்குதலுக்கு தயாராக 10 பேர் கொழும்பில்!

கொழும்பு, ஒக். 16

தற்கொலைத் தாக்குதலுக்குத் தயாராகப் பத்து டெனிம் உடைகளில் தைக்கப்பட்ட குண்டுகளுடன் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை அணியைச் சேர்ந்த பத்துப் பேர் கொழும்புக்கு வந்துள்ளனர்.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக [வெரித்தாஸ்] வானொலி அறிவித்தது.

தற்கொலைத் தாக்குதலுக்கும் பயன்படுத்தப்படும் — டெனிம் உள்ளாடையில் பொருத்தப்பட்ட — சக்தி மிக்க குண்டு ஒன்று கடந்த வாரம் முகத்துவாரத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்தக் குண்டைக் கொண்டு வந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் — இருவயதுடைய — ரெமேஜியஸ் பெர்னாண்டோ என்ற இளைஞரை முகத்துவாரம் புனித ஜேம்ஸ் வீதியில் உள்ள சேரி வீடொன்றில் வைத்து கைது செய்ததாக நேற்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு போர் குறித்து அரசு தவறான செய்திகளைப் பரப்புகிறது

### யாழ். வந்த 'ராவய' செய்தியாளர்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு-கிழக்கு பற்றிய தவறான செய்திகளை சிங்கள மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசு பரப்பி வருகின்றது. தமது தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் இறப்பதாக அரசு கூறுகின்றது. ஆனால் நாளாந்தம் பொதுமக்கள் இறப்பதையே காணக்கூடியதாகவிருக்கிறது.

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையின் செய்தியாளர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

மூன்று செய்தியாளர்களும், ஒரு புகைப்படச் செய்தியாளரும் கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்துக்கு வந்தனர்.

இராணுவத்தாக்குதல்களினால் ஏற்பட்ட அழிவுகளையும், யாழ்தேவி நடவடிக்கையால் ஏற்பட்ட அழிவுகளையும் அவர்கள் பார்த்துச் சென்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

கருணாநிதிக்குப் பதிலடி!

## தமிழீழத்தை ஆதரிப்பதாக கோபாலசாமி அறிவிப்பு

சென்னை, ஒக். 16

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதிக்கு போட்டியாக — கட்சிக்குள் பெரும் சக்தியாக உருவெடுத்து வரும் எம்.பியான வை. கோபாலசாமி, தான் தமிழீழக் கோரிக்கையைத் தொடர்ந்து ஆதரிக்கப்போவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

"சுதந்திரத் தமிழீழக்" என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு தி மு க. ஆதரவளிக்கவில்லை" — என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி அறிவித்ததற்குப் பதிலடியாக கோபாலசாமி மேற்படி அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் நடந்த தி மு க. பொதுக்குழுக் கூட்டத்தில் [illegible]

★ யாழ்ப்பாணம் மீது

## அடுத்த தாக்குதல் புத்தாண்டில்?

லண்டன், ஒக். 16

ஒரு லட்சம் பொதுமக்கள் வாழும் — தமிழரின் தாயகமான — யாழ்ப்பாணத்தின் மீது எந்தத் திகதியில் முக்கியமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து இராணுவம் இன்னமும் வாய்திறக்கவில்லை.

என்றாலும் புத்தாண்டில் அப்படி நிகழக் கூடும் என்று சூசகமாகத் தெரிகிறது.

— இலங்கை இராணுவம் வடபகுதியில் எடுக்கும் நடவடிக்கை குறித்து "பினான்ஷியல் [டைம்ஸ்]" நாளிதழில் நேற்று வெளியான கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அக்கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மிக விரிந்த அளவில் இராணுவம் போரிட்டு வருகின்றது.

இந்த போரில் பலரை இராணுவம் இழந்து விட்டது; பலர் காயமடைந்துள்ளார்கள். இதனால் இராணுவமே பலவீனமடைந்துள்ளது.

இருப்பினும் விரைவாக இழந்த வலிமையை பெற்று வருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முகத்துவாரத்தில் குண்டு; சந்தேகத்தில் 400 பேர் கைது

தற்கொலைத் தாக்குதல் நபர் அணிந்து செல்லக்கூடிய — சக்திமிக்க — குண்டு ஒன்று கொழும்பு முகத்துவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலிஸ் குழுவினர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 400 பேரைக் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-8)

## ரணிலுக்கு லண்டனில் பலத்த பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 16

லண்டன் வழியாக வாஷிங்டனுக்குச் சென்ற ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு லண்டனில் ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கியதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தனர்.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் பிரதமர் தரித்து நின்றபோது எவரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

வாஷிங்டனில் நடக்கும் பொதுநலவமைப்பு நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றச் செல்லும் வழியிலேயே பிரதமர் லண்டனில் தரித்து நின்றார். (உ-8)

கோபாலசாமிக்கு ஆதரவாக

## பொதுக்குழுவைக் கூட்ட கருணாநிதிக்கு வற்புறுத்து

சென்னை, ஒக். 16

தி.மு.க. பொதுக்குழுவைக் கூட்டும்படி கோபாலசாமியை ஆதரிக்கும் எட்டு மாவட்டச் செயலாளர்கள் எழுத்துமூலம் முறைப்படியான கோரிக்கையை தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகனிடம் சமர்ப்பித்துள்ளனர்.

தி.மு.கவில் தோன்றியுள்ள தற்போதைய நெருக்கடி அசாதாரணமானது என்று அவர்கள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டத்தில் பொதுக் குழுவைக் கூட்ட முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறிவிட்டார்.

கோபாலசாமியை தி.மு.கவில் இருந்து வெளியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் இப்போது ஒன்றுக்கொன்று [illegible] உள்ளன.

தி.மு.க பொதுக்குழுவில் மொத்தம் 900 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வடபிராந்திய

## யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

அளிக்கும்

நிதியுதவி

# கலை நிகழ்ச்சிகள்



இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி

காலம்: 16 — 10 — 1993

நேரம்: மாலை 6 மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்தித்துறை சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களினால் நடத்தப்படும் ""வீரதீரச் செயல்கள்"" முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளன.
   - (அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்.
   - (ஆ) இரண்டு உழவு யந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
   - (இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
   - (ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்துப் பிடித்து நிறுத்துதல்
   - (உ) 85 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
   - (ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல்வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
   - (எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்
2. திரு. மோகன் மாஸ்ரர் அவர்களினால் நடத்தப்படும் சுராம்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் நாடகம்.

✶ வீர தீரச் செயல்களில் பங்குபற்றும் கழகங்கள்

1. பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம்.
2. வல்வை உடல் பயிற்சி நிலையம்.
3. இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகம்,
4. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.
5. கற்கோவளம் சுதயதாரகை விளையாட்டுக் கழகம்
6. பருத்தித்துறை உடற் பயிற்சி நிலையம் (ஜிம்னாஸியம்).

'நோயற்ற வாழ்வுக்குப் பெரிதும் துணை நிற்பது'

என்ற தலைப்பில் பட்டிமன்றம்

அ. நவீன மருத்துவமே என வாதிடுபவர்கள்:

திரு. இரா. செல்வவடிவேல் திரு ஆறு திருமுருகன்

ஆ. மருத்துவர்களின் சேவையென வாதிடுபவர்கள்:

திரு. த. சிவகுமாரன் திரு. க குமாரதாஸன்

இ. தற்பாதுகாப்பே என வாதிடுபவர்கள்:

திரு. இ. திருநந்தகுமார் திரு வ ஸ்ரீ பிரசாந்தன்

இரவு 12.00 மணி

கலை, பண்பாட்டுக் கழகம் அளிக்கும் நாடகம்

""களத்தில் காத்தான்""

ரிக்கெட் கிடைக்குமிடங்கள்:

1. ""வெல்கோ"", ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. ""குறிஞ்சி"", திருநெல்வேலிச் சந்தை.
3. ""நாதன் மருந்தகம்"", கல்லியங்காடு.
4. ""தாவடி மெடிக்கல்ஸ்"", கோண்டாவில்.
5. ""மெடி இன்குயரி"", மானிப்பாய்.
6. ""மெடி பிளஸ்"", சுன்னாகம்.
7. ""ஸ்ரீ முருகன்"", நெல்லியடி.
8. ஸ்ரீமுருகன்"", பருத்தித்துறை.
9. ""அம்பாள் பார்மஸி"", சாவகச்சேரி.

குறிப்பு:

யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

— [illegible] சங்கம்.

(சி-6186)

''யாழ்ப்பாணம்''

## பல்கலைக்கு பொருள்கள் எடுத்துவர புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான பொருள்களை எடுத்து வருவதற்கு புதிய நடைமுறை அமுல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்தது.

யாழ். பல்கலைக்கழகத்தை இயக்குவதற்கு தேவையான மண்ணெண்ணெய், காகிதாதிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் போன்றவற்றை இங்கு எடுத்து வருவதற்கு இதுவரை கட்டுப்பாடுகள் தலைமையகம் அனுமதியளித்தால் போதுமானது.

ஆனால் தற்போது பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டதன் பின்னர், யாழ் பல்கலைக்கழகத்துக்கு தேவையான பொருள்களின் பட்டியல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு அந்த குழுவால் அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெற்ற பின்னரே, பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

(ந-8)

திருநெல்வேலி கிழக்கு

## வாலையம்மன் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

செற் அப் முறையிலான

கரப்பந்தாட்டப் போட்டியின்

## இறுதி ஆட்டம்

மின் ஒளியில் நடைபெறும்

பிரதம விருந்தினர்; திரு. திருமதி க. குணராஜா (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

இடம்:- நிலைய முன்றில்

காலம்: 16 — 10 — 1993 மாலை 6.30

அனைவரும் திரண்டு வருக

இரா, மதியழகன்
(தலைவர்)
வாலையம்மன் விளையாட்டுக் கழகம்

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

விளம்பர அன்பளிப்பு:-

சிற்றி போய் ரெயிலேர்ஸ்

181, கே.கே.எஸ் பண்ணை வீதி,

கொட்டடி, (27683) யாழ்ப்பாணம்.

# TWELTH DEATH ANNIVERSARY

IN LOVING MEMORY OF

## JOBUPILLAI EDWARD SOUNDARARAJAH

(Retd. A.C.C D)

Born: 20 — 07 — 1916

Called to Glory: 16 — 10 — 1981

Years May Pass and Fade Away
But Thoughts of You
Will Always Stay.

Ever Sorrowing Wife,
Children & Inlaws,
S.C. Vasanthakumar.
(Son)

Uduvil. (6693)

சுன்னாகம் கந்திஸ்ரார் விளையாட்டுக் கழகம்
நடத்தி வந்த 9 பேர் கொண்ட
லீக் முறையிலான உதைபந்தாட்டச்
சுற்றுப் போட்டியின்

## இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

காலம்: 17 — 10 — 1993 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானம்

நேரம்: மாலை 3.00 மணி

மோதும் கழகங்கள்

1. தாவடிந்துறை சென் மேரிஸ் எதிர் விநாயகர் விளவெட்டி
2. நேரம்: 4.00 மணிக்கு சம்பியன் ஆட்டம் மயிலங்காடு ஞானமுருகன் எதிர் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம்

குறிப்பு:-
மேற்குறிப்பிட்ட நேரத்தில் கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் ஆரம்பமாகும்.

— நிர்வாகத்தினர்.

(6694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

10', 8' நீளமான இரண்டு தனி முதிரை கண்ணாடி அலுமாரி, 5 அந்தர் அலெவரி தராசு புதுமொடல், மேசை தராசு விற்பனைக்குண்டு சி. பரஞ்சாமி, வெற்றிலை வியாபாரம், மார்க்கட் வெளிக்கடை, யாழ்ப்பாணம். (6543)

### கோழிக்குஞ்சு விற்பனை

Lohmann Brown ஒரு மாதம் முடிந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. இல. 29, சவாட்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (27656)

### காணி விற்பனைக்கு

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் வள்ளுவன் வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் இடம்: இ. பாலகிஷ்ணன், மானிப்பாய் வீதி, இணுவில். (27658)

### சனி வக்கிர மாற்றம்

12-10-93 வியாழ மாற்றம், 15-10-93 சனிவக்கிர மாற்றம், (மகரத்திற்கு) 31-10-93 செவ்வாய் மாற்றம், 10-11-93 மீண்டும் சனிமாற்றம் (கும்பத்திற்கு) என ஜோதிடமும் அடங்கியது. ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது: மது புத்தகசாலை, கொக்குவில் சந்தி. (நூலாசிரியர்: "சதியா") 6692)

### FOR SALE

A Comfortable three roomed House with all Conveniences Including Cemented Cowshed within the Vicinity of Palaly/Amman Road Junction of Jaffna Town. Excellent Title and Plan. No brokers Contact Mr C. Rajadurai, 88, Yarl Road, Jaffna. (27670)

### தேவை

எழுதுவினைஞர், நூலகர், விநியோகஸ்தர்கள் தேவை. விண்ணப்பத்துடன் சுயமுகவரி, முத்திரையிடப்பட்ட கடித உறையுடன் தொடர்பு கொள்க. "மாற்றம்" பணிமனை, புதிய செம்மருந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு. (27655)

### தரமான வேலைகளுக்கு

றபர்சீல், பாடசாலைச் சின்னம், புளொக், கவர் போட்டோ ஆகியவற்றை குறைந்த செலவிலும் குறித்த தவணையிலும் செய்துபெற்றுக்கொள்ளவும். ராஜா றபர் சீல், தயாரிப்பாளர்: 607/1, கே. கே. எஸ். வீதி, மனோகரா சந்தி வடக்கு, யாழ்ப்பாணம். (6536)

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

### வர்த்தகமும் கணக்கியலும்

வர்த்தகமும் கணக்கியலும் G.C.E. O/L வகுப்புக்கான 1986 தொடக்கம் 1992 வரை 7 வருட கடந்த கால வினா-விடை உள்ளடக்கியது. ஆக்கம்: இ. செல்வநாயகம். கணக்கியல் ரூபா 45/- வர்த்தகம் ரூபா 60/- தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-6197)

### மணப்பெண்கள் தேவை

செல்வாய்க் குற்றமுள்ள 43 வயது, 28 வயது, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பெண்கள் தேவை. பல்வேறு மணமக்கள் இருக்கிறார்கள். சந்திப்பு: ஞாயிறு காலை. மங்கள ஏஜென்சி, கொப்பாய்த்தோட்டம். (27669)

### இலவச திருமண சேவை

37 வயது, சித்திரை 8, செவ்வாய் 4, பாவம் 72 ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். அ. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27664)

### ஆவே மரியா

செபமாலைகள், செபமாலை தியானப் புத்தகம், இறை இரக்கத்தின் நவநாள், குழந்தை யேசு நவநாள், ஆரோக்கிய மாதா நவநாள், அந்தோனியார் நவநாள் விற்பனைக்குண்டு. புனித சித்தாத்திரை மாதா, இல. 92, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (27662)

### காணவில்லை

T 2200974 இலக்கமுடைய லேடீஸ் அமாயா சைக்கிள் ஆலயத்திற் வீதியில் 14-10-93 அன்று காணாமல் போயுள்ளது. இதன் விபரம் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும். தொடர்பு: இ. குபேரகாந்தன், 89, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவிலடி (27659)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல்வாத்தியங்கள் யாவும் உத்தமாக சாதம்போட்டு தரப்படும்; கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (27643)

---

# O/L
## PAPER CLASS

| | |
|---|---|
| கணிதம் | — சதிஷ் |
| விஞ்ஞானம் | — குகாநிதி |
| சமூ. கல்வி | — இயூபேப் |
| ஆங்கிலம் | — கிரி |
| தமிழ் | — பிரதிபன் |

ஆரம்பம்:
**16 — 10 — 93**
காலை 8 மணி

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(இ-6408)

---

# சயன்ஸ் அக்கடமி

நெல்லியடி.

## A/L 94
### பிரிவு II

துரித மீட்டல்
அலகு ரீதியிலானது

தூய, பிரயோக கணிதம் — வெக்ரர்
பௌதீகம் — கணேசன்
இரசாயனம் — சண்
விலங்கியல் — ஞானேந்திரன்
தாவரவியல் — குணசீலன்

முக்கிய குறிப்பு: வடமராட்சியில் எமது நிறுவனத்தில் மட்டும் வகுப்பு நடைபெறும்: திங்கள், வெள்ளி நாட்களில்.

ஆரம்பம்:
**18 — 10 — 1993**
திங்கள் பிற்பகல் 3 மணி

(27666)

---

# யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்
## 14 - 11 - 1993

மேற்படி கூட்டம் 1993 - 11 - 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் திரு. ச. முருகேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்களின் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதத்தையும் சமாச காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

வ. விக்னேஸ்வரன்,
பதில் மாவட்டச் செயலாளர்,
யாழ். மா. சி. க. கூ. ச சமாசம்.

182 1/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இ-6240)

---

# பாடசாலை அனுமதி 1994

## நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை
கைதடி.

மேற்படி பாடசாலையில் 1994 ஆம் ஆண்டு அனுமதி கோர விரும்புவோர் பாடசாலை அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 30 - 11 - 1993 க்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

★ செவிப்புலன் விழிப்புலன் இழந்த பாடசாலை அனுமதி வயதெல்லைக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் அனுமதி கோர உரித்துடையவர்.
★ கல்வி, விடுதி வசதி, உணவு யாவும் இலவசம்.
★ நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் விவரங்கள் வேண்டின் தொடர்பு கொள்ளவும்.

- அதிபர்.

(இ-6221)

---

## புதிய LONDON ACCOUNTANCY
CLASSES May - June 1994

C. I. M. A. Stage - I
A. A. T. Inter

ஆரம்பம்: 18 - 10 - 1993

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

(சி-6192)

---

# யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
## இளைஞர்களுக்கான சுயசார்பு அடிப்படைத் தொழில்நுட்ப கற்கை நெறி

வீட்டுத் தேவைக்கான அடிப்படைத் தொழில்நுட்ப அறிவினை வழங்கும் இக் கற்கை நெறியில்,

1. துவிச்சக்கர வண்டி திருத்துதல்
2. மின் இணைப்பு பழுது பார்த்தல்
3. நீர்க்குழாய் இணைப்பு பழுதுபார்த்தல்
4. மரவேலை ஆகியன உள்ளடங்கும்.

★ மேற்படி கற்கை நெறியானது இம்மாதம் 30 ஆம் திகதி சனி, காலை 9-00 மணிமுதல் பிற்பகல் 4-00 மணி வரை மட்டும் நடைபெறும்.

★ 15 வயது முதல் 25 வயது வரையிலான இளைஞர்கள் மட்டுமே இந்நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

★ இக் கற்கை நெறியினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் அனைவர்க்கும் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, அவர்களில் அதிர்ஷ்டசாலிகளுக்கு உபகரணத் தொகுதிகள் (Tools kit) இலவசமாக வழங்கப்படும்.

★ இந் நெறியில் கற்க விரும்புவோர் 16-10-1993 (இன்று) 17-10-1993, 23-10-1993 (சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை கீழ்வரும் முகவரியில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருத்தமான ஆவணத்துடன் நேரில் சமுகந்தந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.

★ பதிவுக் கட்டணம் ரூபா 25/-

தொழிற்சேவை இயக்குநர்,
யாழ் றோட்டறிக் கழகம்,
மே/பா "கம்பன் கோட்டம்",
300, கோயில் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(இ 6239)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
## கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்

யா/இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க ஸ்தாபக உறுப்பினரும், அன்று தொட்டு இறுதிவரை, பாடசாலை அபிவிருத்தியில் அக்கறை கொண்டு அயராது உழைத்தவரும், வானிகல அமைதான நிலைய இளைப்பாறிய அதிகாரியுமான அமரர் கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/இடைக்காடு
ம. வி. பழைய மாணவர் சங்கம்

இடைக்காடு,
அச்சுவேலி. (27671)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இந்தியாவின் ஊடல்!

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் திடீர் முறுகல் நிலை தோன்றி இருக்கிறது. இந்திய - தமிழக - மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கண்டபடி சுட்டுக்கொல்லப்படுவதே இந்த முறுகலுக்குக் காரணமாக அமைந்தது.

இது விடயத்தில் தான் சற்றும் அசட்டையிருப்பதாக இந்தியா காட்டிக் கொள்கிறது. இதனை உணர்ந்து கொண்ட ஸ்ரீலங்கா அரசு எப்படியும் தகராறைத் தீர்த்து இந்தியாவின் கோபத்தைத் தணித்து சமாளித்துவிட வேண்டுமென்று துடிக்கிறது. இந்த நெருக்கடியில் இருந்து விடுபட்டு முறுகலை அவிழ்த்து விட வேண்டும் என்று அவசரப்படுகிறது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பிராந்தியத்தில் தொழில் செய்வது இன்று நேற்று நடப்பதல்ல. அது போலவே ஸ்ரீலங்கா கடற்படை கச்சதீவுப் பிரதேசத்தில் தொழில் செய்யும் இந்திய மீனவரைக் கூட தாக்குவதும் விரட்டுவதும் புதிய சம்பவங்கள் அல்ல. இதற்கு முன்னரும் சில தடவைகளில் தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமானது உண்டு. அப்போதெல்லாம் இந்திய மத்திய அரசு கண்டுங் காணாதது போல இருந்தது. பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை.

இம்முறை ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழக மீனவரைப் பலி கொண்ட சம்பவம், தமிழகத்தில் ஓர் அரசியல் நெருக்கடிக்கு வழிகோலும் அபாயம் தெரிகிறது. அதன் தாக்கம் தமிழகத்தில் பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

அவ்வாறு நெருக்கடி உருவாகும் பட்சத்தில், ஜெயலலிதா அரசு, அதற்கான முழுப்பழியையும் மத்திய அரசு மீது சுமத்திவிடும் என்பதும் வெளிச்சம். அதன் விளைவாகத் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு உள்ள ஆதரவு மேலும் சரிந்து விடும். அதனைத் தடுக்க வேண்டும் என்ற அரசியல் நலன் கருதியே ஸ்ரீலங்காவுக்கு கடும் போக்கு நிலையைக் காட்ட இந்தியா முடிவு செய்திருக்கக்கூடும்.

மேலும் பாக்குநீரிணையில் இந்திய - ஸ்ரீலங்கா கூட்டுக் கடற்படை ரோந்துக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது, அது ஆகுமாகப் பூர்த்தி அடையும் தறுவாயில், இந்தியாவின் கோபம் தனக்குப் பெரும் நட்டத்தை மட்டுமன்றி பாதகமான விளைவுகளை உண்டாக்கும் என்று ஸ்ரீலங்கா அஞ்சுகிறது.

கூட்டுக் கடற்படை ரோந்து என்பது, ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு ஸ்ரீலங்கா போட்ட திட்டங்களில் ஒன்று. அதில் சம்பந்தப்படுவதன் மூலம் இந்தியாவும் ஈழத்தமிழர் போராட்டத்தை நசுக்குவதில் ஸ்ரீலங்காவுடன் வெளிப்படையாகக் கைகோர்த்து நிற்கிறது!

ஈழத்தமிழர் போராட்டத்தை நசுக்கவே வேண்டும் என்பதில் இந்தியாவும் ஸ்ரீலங்காவும் ஒரே கோட்டில் நிற்கின்றன. ஆகவே இந்தியாவின் கோபமும், ஆத்திரமும் சந்தர்ப்பம் பார்த்து தனது நாட்டாண்மைத் தனமே. இதனை ஒரு சிறு ஊடல் என்றுங் கூறலாம். ஆகையால் நெருக்கடி, முறுகல், கடும் போக்கு என்பன யாவும் தற்காலிகமானவை! முறுகல் முற்றி முறியும் என்பதற்கான ஏதோ எதுவுமே இல்லை!!

## இன்று

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவ முதல்வர்களின் வருடாந்த ஒன்றுகூடல் விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்து கொள்வர். (சு-117)

o o o

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகால் நடத்தப்படும் புகைப்படக் கலைப் பயிற்சி நெறியின் ஒன்பதாவது பிரிவினருக்கான பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. (க-143)

o o o

அறிவுக் களஞ்சியம் சிறப்புப் பொது அறிவுப் போட்டியின் வினாடி வினா போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9-50 மணியளவில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறும். (ந-162)

o o o

யாழ். மாநகரசபை சிற்றூழியர்களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறும். (ஓ-162)

## நாளை

சுன்னாகம் மயிலணி லைப் பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சுன்னாகத்திலிருந்து ஆரம்பமாகும். (உ-89)

o o o

வடமராட்சி அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்க வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வி. கே. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெறும். (உ)

o o o

தாயகம் சஞ்சிகை நடத்தும் "கலை இலக்கியமும் திறனாய்வும்" எனும் பொருள் பற்றிய இலக்கியப் பகிர்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். இப்பகிர்வரங்கில் கவிஞர் இ. முருகையன் "உழைமையான கோட்பாடுகள்" எனும் பொருளில் கருத்துரை வழங்குவார். (உ)

o o o

யாழ்ப்பாணம், ஒக். 16

நல்லைத் தமிழ்ச் சங்கம் அளிக்கும் இரண்டாவது இலக்கிய அரங்கம் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு புதிய செம்மணி வீதி 54 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும்.

இலக்கிய அரங்கில் "நல்லதோர் வீணை செய்வோம்" எனும் பொருளில் கவியரங்கும் "நல்லதோர் இலக்கியம் செய்வோம்" எனும் பொருளில் கருத்தரங்கும் இடம்பெறும். (உ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். மாவட்ட கதைசற் தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் புதிய மத்தியஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படவிருந்த பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-20)

# யாழ். பல்கலைக்கழகத்தின் மாதாந்த செலவு நிதி வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படும் நிதி உதவி மூன்றில் இரண்டாக வெட்டப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாதாந்த செலவினத்துக்கு 1 கோடியே 80 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது.

ஒதுக்கீட்டுக்குரிய பணத்தை திறைசேரியே நேரடியாக வழங்குகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் யாழ் பல்கலைக்கழகத்துக்குரிய மாதாந்த நிதி உதவியைத் திறைசேரி 80 லட்சம் ரூபாவாகக் குறைத்துள்ளது.

இதேவேளை, மாதாந்த மூலதனச் செலவும் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. திறைசேரியின் நிதிப்பற்றாக்குறையைக் காரணம் காட்டியே யாழ் பல்கலைக்கழகத்திற்குரிய நிதி உதவிகள் வெட்டப்பட்டுள்ளன.

இந்த நிதி வெட்டினால் திட்டமிட்ட பல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாதிருப்பதாகவும், பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (அ-8)

## ஆலயங்களில் நவராத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் இன்று நவராத்திரி விழா ஆரம்பமாகிறது. அம்மன் ஆலயங்களில் இவ்விழா சிறப்புற நடைபெறும். இல்லங்களிலும் நவராத்திரி பூசை இன்று ஆரம்பமாகிறது.

பல ஆலயங்களில் நவராத்திரி விழாவை முன்னிட்டு சமயப் பேருரைகள், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு ஏற்பாடாகி உள்ளது.

சில ஆலயங்களில் நேற்றையதினமே நவராத்திரி விழா ஆரம்பமாகிவிட்டது. (அ 30-15)

# 180 முகாம்களில் மட்டுமே ஈழ அகதிகள் தங்கியுள்ளனர்

## தமிழக அதிகாரி தகவல்

சென்னை, ஒக். 16

இலங்கைத் தமிழ் அகதிகள் படிப்படியாக அவர்களின் தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருவதால் தற்போது தமிழகத்தில் அவர்கள் தங்கியுள்ள முகாம்களின் எண்ணிக்கை 237 இல் இருந்து 180 ஆகக் குறைந்துள்ளது.

தமிழக மறுவாழ்வுத்துறை ஆணையாளர் சி. எம். இராமதாஸ் முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார்.

ஈழ அகதிகளில் 8 ஆயிரம் பேர் எதிர்வரும் டிசம்பரில் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும்-

தற்போதுள்ள 180 முகாம்களில் 78 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர் என்றும், இதுவரை 37 ஆயிரம் பேர் இலங்கைக்குத் திரும்பி விட்டனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஈழ அகதிகளுக்காக இதுவரை 55 கோடி ரூபாவை தமிழக அரசு செலவு செய்துள்ளதாகவும் இராமதாஸ் குறிப்பிட்டார். (ஓ-எ-க)

## மானிப்பாய் இந்துவில்

# இன்றும் நாளையும் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 16

தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை சித்திரிக்கும் மாபெரும் புகைப்படக் கண்காட்சி இன்றும், நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 9 மணிக்கு வலிகாமம் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி எழில்கொடி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் யாழ் மாவட்டத் தளபதி திரு. ம. அன்பு தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

இன்று மாலை 7 மணிமுதல் ஒளிப்படக் காட்சிகள் இடம்பெறும்.

நாளை காலை 9 மணிமுதல் கண்காட்சியை மக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

மாலையில் வலிகாமம் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இதயன் தலைமையில் நடக்கும் நிகழ்வில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை அதிபர் திரு. அ. மு. அருணாசலம், யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சி இளம்பரிதி ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (உ 5)

# தொழில் நுட்பக் கல்லூரி விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. என். ஜெயரத்தினம் தெரிவித்தார்.

தொழில் நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 29 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

[illegible] இன்னும் வந்து சேரவில்லை என்றும் -

வர்த்தமானி அறிவித்தல் இங்கு கிடைத்து ஒருமாத காலம் வரை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கலாம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை தொழில் நுட்பக் கல்லூரி நல்லூரி இலைவிக் பெறலாம் என்றும் - அவர் தெரிவித்தார். (உ-8)

## கலையரங்கத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஒக். 16

கைதடி மேற்கு சனசமூக நிலைய புதிய கலையரங்கத்தின் திறப்புவிழா இன்று சனி மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழாவில் 'கிராமத்துக்குரல்' நூல்வெளியீடு, கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் பட்டிமன்றம் கூட்டம் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-5)

## 'வாதுவ'வில் தபால் பொதிகள்

நாளை மறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் வாதுவ கப்பலில் 611 தபால் பொதிகளும் எடுத்து வரப்படுகின்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவற்றில் வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் அடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(மற்றொரு செய்தி 8 ஆம் பக்கத்தில்) (ஓ-க-17)

## கிளார்க் மண்டேலாவுக்கு நோபல் பரிசு

ஒஸ்லோ, ஒக். 16

இவ்வாண்டிற்கான நோபல் சமாதானப் பரிசு ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா, தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் ஆகிய இருவருக்கும் கூட்டாக வழங்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக தென் ஆபிரிக்காவில் நிலவிவந்த நிறவெறிக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அந்த நாட்டை ஜனநாயகப் பாதைக்கு இட்டுச் செல்ல இவ்விரு தலைவர்களும் மேற்கொண்டு வரும் முயற்சியைக் கௌரவிக்கும் வகையில் இந்த உயரிய பரிசு வழங்கப் படுவதாக நோர்வே நாட்டின் நோபல் பரிசுக் கமிட்டி நேற்று அறிவித்தது. (ஓ-எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்டு வரும் சதுரங்கப் போட்டித் தொடரில் சாவகச்சேரி கோட்ட மாணவர்களுக்கான ஆட்டங்கள் இன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

o o o

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாஜம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய அணியை எதிர்த்து திருநகர் பாரதி சனசமூக நிலைய அணி மோதும்.

### வன அழிப்பு-ஓர் சன அழிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

